முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் புகழ்சோழ நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

29.12.2018, சனிக்கிழமை

1. **கனிவு மிகுந்த கந்த வேலனின்**
**கருணை வடிவாக வந்த அரங்கா**
**கனிவு சிந்தையே அருள்சிந்தையாகி**
**கடைப்பிடிப்பவர் சிறப்பறிவு காண்பாரென**

2. எனக் கூறி ஞானவழி காட்டும்
ஏழாம் படை வீட்டு தவசியே
ஞானம்பட ஒளி சூட்சும நூலை
நாட்டிடுவேன் **விளம்பி சிலை திங்கள்**

3. **திங்களிலே முன்னான்கோர் திகதி காரி வாரம்**
**(விளம்பி வருடம் மார்கழி மாதம் 14ம் நாள் 29.12.2018, சனிக்கிழமை)**
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
உலக மக்கள் தன்னலம் தவிர்த்து

4. தவிர்த்து பொதுநல நோக்கில்
தயவு பெருக்கும் வகையாக
அவணியிலே வறியவர்க்கு ஈந்து
அடுத்தவர்க்கு கொடுத்து பழக

5. பழகவே அவரவர்க்கு உள்ளும்
பரோபகார முதற்படியான
இளகிய கனிவு சிந்தை பெருகும்
இந்த நிலை உயர உயர

6. உயரவே உலகில் பழகுபவர்க்கு
உயர்வான அருள் சிந்தையாக மாறும்
தயவு வழி மேலவவர் துணைபட
தகுதி நிலை பெருகும் மக்களிடம்

7. மக்களிடம் சிறப்பறிவு கூடும்
மாற்றம் கண்டிட கொண்டிட
தேக்கமிலா ஞான பலம் கூடும்
தெய்வீக அருள் ஞானிகளின் துணை கூடி

8. கூடியே இந்தவித மக்களே
குவலயத்தை மாற்றம் செய்கின்ற
தேடிய அரங்கமகான் வழி
தெய்வீக ஞானவான்கள் ஆவர்

9. ஆவரே இந்தவித மேல்குணம்
ஆற்றல்மிக்க புனித குணம்
யாவர்க்கும் பிறவித் தொடர்பால்
உயர் ஞானிகளை வணங்குவதால் வரும்

10. வருகவே இந்தவித நிலை பெற
வையகத்தை ஞானயுகமாக்க
ஆறுமுக அரங்கன் காட்டுகின்ற
அற்புதமான கொள்கை ஏற்று வர

11. வருகவே உலகம் சமநிலை பெறும்
வளமும் வளர்ச்சியும் கண்டு
முருகப்பெருமான் ஆளுமைக்கு வரும்
மொழிந்திட்ட ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் புகழ்சோழ நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

கனிவுமிகுந்த முருகப்பெருமானின் கருணையே வடிவமாக இவ்வுலகினில் அவதரித்திட்ட அரங்கமகா தேசிகனே ஒரு மனதில் உண்டாகும் கனிவு சிந்தையே அருள் சிந்தையாக மாறி கனிவினை கடைப்பிடிப்பவர் அருள்பலம் பெற்று சிறப்பறிவை காண்பார்கள் எனும் அற்புதமான ஞான ரகசியத்தை தயவே ஞானவீட்டின் திறவுகோல் என உலகிற்கு உணர்த்தி உலகோர்க்கு ஞானவழி காட்டும் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலின் மகாதவசியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 14ம் நாள் 29.12.2018, சனிக்கிழமையான** இன்றைய தினமதனிலே முருகப்பெருமானின் ஞானஉலகம் அமையவே ஒளி சூட்சும நூல்தனையே புகழ்சோழ நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் புகழ்சோழ நாயனார்.

உலக மக்களெல்லாம் தன்னலம் தவிர்த்து பொதுநல நோக்கில் செயல்பட்டு தயவினை பெருக்கிடும் வகையினிலே இயலாதவர்களுக்கும் வறியவர்களுக்கும் தானம் கொடுத்தும் பிறர்க்கு கொடுத்தும் சகோதரத்துவமாய் பழகிட வேண்டும். பிறருக்கு கொடுத்து பழகிட பழகிட கொடுப்பவர்களின் உள்ளத்திலே பரோபகாரம் என்கிற ஜீவதயவின் முதற்படியான மனம் இளகிய கனிவு சிந்தை பெருகிடும்.

இப்படிப்பட்ட தயவு உணர்வான, ஞானத்தை தரவல்ல தயவு பெருகிட பெருகிட, அதுவே உயர்வினை ஞானம் அளிக்கும் அருள் சிந்தையாக மாறிடும். தயவின் மூலமாக மேலவர்களான ஞானிகளின் துணையுடன் அருளும் பெற்று தகுதியில் உயர்ந்து நிற்கும் பண்புள்ள பரோபகார மக்களிடம் சிறப்பறிவு அதிகரிக்கும். சிறப்பறிவு அதிகமாக அதிகமாக தடையற்ற ஞானபலம் பெருகிடும். மேலும் மேலும் தெய்வீக அருள் ஞானிகளின் துணையால் அவர்களுக்கு கிடைத்திடும்.

இப்படி தெய்வீக அருள்பலமும், ஞானபலமும் ஞானிகளின் துணையினையும் பெற்ற மேன்மக்களே இவ்வுலகினில் உலகப்பெருமாற்றம் செய்கின்ற வல்லமை பெற்றவர்கள் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் வழியில் வந்து தேறிய தெய்வீக ஞானவான்களாக ஆகிடுவார்கள்.

இப்படிப்பட்ட உயர்வான குணம் ஆற்றல்மிக்க புனிதமான குணம் பிறவித் தொடர்பினால் உயர் ஞானிகளை வணங்குவதால் வரும்.

இப்படிப்பட்ட புனிதமான நிலையை பெற்றிட வேண்டுமாயின் துன்பம்மிக்க கலியுகத்தையே ஞானயுகமாக ஆக்கி காட்டுகின்ற வல்லமைமிக்க மகா ஞானி முருகப்பெருமானின் அவதாரம் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்ற அற்புதமான ஞானக் கொள்கைகளை ஏற்று அடிபிறழாமல் தவறாமல் கடைப்பிடித்து வர வேண்டும்.

உலகோர் அரங்கனின் ஞானக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டு கடைப்பிடித்திட உலகம் சமநிலை பெறும், உலகம் நல்ல வளர்ச்சியை காணும், எல்லா வளங்களையும் பெறும், உலகமே முருகப்பெருமானின் ஞானஆட்சியின் கீழ்வந்து இவ்வுலகமே ஞான உலகமாக மாறிடும் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உரைக்கின்றார் மகான் புகழ்சோழ நாயனார்.

–சுபம்–